NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 24 May 2019

# பல்கலைக்கழக வளாகத்தில் ஓட்டுநரில்லா இடைவழி பேருந்துச் சேவை பரிசோதனை

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் கென்ட் ரிட்ஜ் வளாகத்தின் உள்ளேயும் வெளியேயும் தானியங்கி இடைவழிப் பேருந்துச் சேவை நாளை முதல் பரிசோதித்துப் பார்க்கப்படும்.

கம்ஃபர்ட்டெல்குரோ நிறுவனம் அந்தப் பேருந்தை ஓராண்டு காலம் பரிசோதித்து அத்தகைய ஒரு சேவையை வர்த்தக ரீதியில் செயல்படுத்துவது சாத்தியமா என்பதை முடிவு செய்யும்.

EZ10 என்ற அந்த தானியங்கிப் பேருந்தை பிரான்ஸ் நாட்டின் 'ஈஸி மைல்' என்ற நிறுவனம் உருவாக்கி இருக்கிறது. பரிசோதனை ஹெங் மூய் கெங் டெரசுக்கும் பிசினஸ் லிங்கிற்கும் இடையே தொடங்கும்.

இடைவழிப் பேருந்து 5 கி.மீ. முதல் 16 கி.மீ. வரை வேகத்தில் சென்று சுமார் 45 நாட்களுக்கு வரைபடத் தகவல்களைத் திரட்டும். அதனைத் தொடர்ந்து நான்கு வார காலம் அடுத்த கட்ட பரிசோதனை நடக்கும்.

இந்தப் பரிசோதனை காலக்கட்டங்களில் பேருந்து, பயணிகளை ஏற்றிச் செல்லாது. மூன்றாம் காலாண்டில்தான் வர்த்தக ரீதியில் பயணிகளை ஏற்றிச் சென்று பரிசோதனை நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக கூறப்பட்டது.

பேருந்தில் 12 பேர் வரை பயணம் செய்யலாம். பாதுகாப்பை உறுதிப்படுத்த ஊழியர் ஒருவர் அதில் இருப்பார். பேருந்துப் பரிசோதனை மார்ச் மாதம் தொடங்கும் என்று ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டது.

இந்தப் பரிசோதனை ஒருபுறம் இருக்க, கம்ஃபர்ட்டெல்குரோ நிறுவனம் தன்னுடைய துணை நிறுவனமான எஸ்பிஎஸ் டிரான்சிட் மூலமாக இப்போது இதேபோல் இதர இரண்டு பரிசோதனைகளில் ஈடுபட்டுள்ளது.

இந்தப் பரிசோதனைகள் செந்தோசாவிலும் ஜூரோங் தீவிலும் இடம்பெற்று வருகின்றன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.